● இளம் கணவனும் மனைவியும் காயம், குழந்தை மயிரிழையில் தப்பியது

# வல்வெட்டித்துறையை நோக்கி பலாலிஷெல்

வல்வெட்டித்துறைப்பகுதியை நோக்கி பலாலியிலிருந்து நேற்றுக்காலை பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இளம் கணவனும் மனைவியும் படுகாயமடைந்தனர். இவர்களின் வீடும் சேதமடைந்தது. இ. விஜயகுமார் (27), வி. மகேஸ்வரி (26) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களது ஒருவயதுக் குழந்தை மயிரிழையில் உயிர் தப்பியது குறிப்பிடத்தக்கது. அதிகாலையிலும் ஷெல்கள் ஏவப்பட்டன இவை ஆதிகோவிலடி, ரேவடி, காட்டுவளவு போன்ற பகுதிகளில் விழுந்து வெடித்தன. சில வீடுகளும், ஏற்கனவே சேதமடைந்த கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 160 பிரசோற்பத்தி சித்திரை 24 (07-05-1991) செவ்வாய்

★ கோழியகுளத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின்

# சடலங்களை பொறுப்பேற்க செஞ்சிலுவைச் சங்கம் தயக்கம்

## வவுனியாவில் தொண்டர் நிறுவனங்கள் மீது படையினர் தாக்குவதே காரணமாம்

நேற்று முன்தினம் வவுனியா கோழியகுளம் பகுதியில் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் 16 சடலங்களை பொறுப்பேற்க சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தயக்கம் காட்டுகின்றது.

விடுதலைப்புலிகள் தாம் நடாத்திய அதிரடித்தாக்குதலின் கொல்லப்பட்டு மீட்கப்பட்ட படையினரது 16 சடலங்களை வவுனியா பகுதிக்கு வந்து பொறுப்பேற்கும்படி செஞ்சிலுவைச் சங்கத்தை கேட்டுக்கொண்டனர்.

ஆனால் இச்சடலங்களை வவுனியா பகுதிக்கு வந்து பொறுப்பெடுக்க தமக்கு பாதுகாப்பு இல்லை என கூறி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பொன்னாலை நோக்கிநேற்றும் பலாலியிலிருந்து ஷெல் வீச்சு

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை 3. 40 மணியளவில் வட்டுக்கோட்டை, பொன்னாலைப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் மூளாய் வெளியில் விழுந்து வெடித்தன.

பலாலியிலிருந்து சென்ற ஷெல்களின் இரைச்சல் சத்தத்தை அவதானித்த வட்டுக்கோட்டை, பொன்னாலை, மூளாய், சித்தன்கேணி, கலைநகர் பகுதி பொதுமக்கள் பெரும் பீதியுடன் கோவில்களுக்கு சென்றனர். 12

## சரவணையில் வீடு பார்த்தவர் இராணுவத்திடம் அகப்பட்டார்

சரவணையில் வீடொன்றைப் பார்க்கச் சென்றவர் ஒருவரை அங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று நண்பகல் பிடித்துச் சென்றதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவருடன் வேறு சிலரும் சென்றதாகவும் அவர்கள் இராணுவத்தைக் கண்டு ஓடி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. 19

## பதுங்கியிருந்து படையினர் பொதுமக்கள் மீது தாக்கு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் இணைந்து

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கரைநோக்கி வந்த படையினர் மீது வல்வையில் புலிகள் தாக்குதல்

வல்வைகடற்கரையில் தரையிறங்க முயன்ற கடற்படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியிரட்டினர்.

நேற்று முன்தினமிரவு 10 30 மணியளவில் நான்கு விசைப்படகுகளில் வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் இதனால் படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து கடலில் இருந்து குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதே வேளை பலாலி முகாமிலிருந்தும் ஆட்லறி ஷெல் தாக்குதல் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, வல்வெட்டி, பொலிகண்டி பகுதிகளுக்கு நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில்வல்வையைச் சேர்ந்த வல்லிபுரம் தியாகராசா (88), மாணிக்கம் தாமோதரம்பிள்ளை (70), பாலசுப்பிரமணியம் மகேந்திரராசா (40) ஆகியோர் படுகாயமடைந்தனர். 39

## பி. பி. ஸி தகவல்

## கரும்புலிகளால் தாக்கப்பட்டது கடற்படையின் 'கொமாண்ட்' கப்பல்

கடந்த சனியன்று கரும்புலிகளினால் வல்லை கடலில் தாக்கப்பட்ட கடற்படையினரின் கப்பல் ''கண்காணிப்பு கொமாண்ட் கப்பல்'' என பி பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் தொடர்ந்தும் விமானத்தாக்குதல்

வவுனியாவில் நேற்றும் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றன. இரு பொம்மர்கள், இரு ஹெலிகள் அவ்ரோ என்பன பாலமோட்டை,

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா இராணுவம் குறித்து

## தொண்டர் ஸ்தாபனங்கள் தூதரகங்களுக்கு முறையீடு

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் வான்' தரை தாக்குதல்களினால் தமது நிவாரணப் பணிகளை வடபகுதியில் மேற்கொள்ள முடியாதுள்ளதாக கொழும்பிலுள்ள தூதரகங்களுக்கு தொண்டர் ஸ்தாபனங்கள் முறையிட்டுள்ளன.

இந்திய தூதுவருக்கு இந்த ஸ்தாபனங்கள் தமது முறையீட்டு அறிக்கையை அனுப்பி உள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

## வெளிமாவட்ட ஆசிரியர்கள் கையெழுத்திட வசதி

வெளிமாவட்டத்திலிருந்து விடுமுறைக்காக யாழ்ப்பாணம் வந்து மீண்டும் திரும்பிச் செல்ல முடியாத ஆசிரியர்கள் தாம் வதியும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் கையெழுத்திடுமாறு யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

போக்குவரத்துச் சிரமம் குறிப்பிட்ட இடங்களுக்கு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஏப்ரல் மாத வவுச்சர்கள் யாழ்செயலகம் வந்துள்ளன

1991 ஏப்பிரல் மாதத்துக்குரிய வவுச்சர்கள் யாழ் செயலகம் வந்துள்ளன.

ஓய்வூதியக் கிளையில் இந்த வவுச்சர்கள் தொடர்பான வேலைகள் முடிவடைந்ததும் இவ்வார இறுதிக்குள் அவை ஓய்வூதியம் பெறுவோருக்கு அனுப்பிவைக்கப்படவிருப்ப

— 04 ஆம் பக்கம் பார்க்க

## க.பொ.த.(சா.த)பரீட்சை எடுக்காதவர்களில் தகுதியானவர்களுக்கு உயர்தரம் கற்க வசதி

1990-ம் ஆண்டு க. பொ த. (சா. த) பரீட்சை இன்னமும் நடைபெறாததால். அவ்வாண்டு மாணவர்களில் தகுதியானவர்கள் [க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி கற்க வசதி செய்து கொடுக்கப்படும் என கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் உயர்தர வகுப்பிற்கான மாணவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது.

புதிய க.பொ.த. (உயர்தர வகுப்புக்கள் எதிர்வரும் 15-ம் திகதி ஆரம்பிக்கப்படும் என

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கோழியகுளத்தில் 2 அதிகாரிகளும் பலி

வவுனியா கோழியகுளம் பகுதியில் இராணுவத்தின்மீது புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் 20 படையினர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# பங்களாதேஷில் மீண்டும் புயல்!

## மற்றொரு சூறாவளியும் தாக்கலாமென எச்சரிக்கை!!

கடும் சூறாவளியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பங்களாதேஷில் நேற்று முன்தினம் மற்றுமொரு புயல்வீசியதாக அறிவிக்கப்படுகிறது.

அறுபது கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய புயலினால் மீட்பு வேலைகள் மீண்டும் பாதிக்கப்பட்டன. கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் மக்களுக்கு தற்பொழுது உடனடியாக குடிநீர், மருந்து, மற்றும் உறைவிட உதவியே தேவைப் படுவதாக ஐ.நா. துயர் துடைப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

இதனிடையே பங்களாதேஷில் புயலால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுடன் சில தினங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட தொடர்புகள் நேற்று முன்தினம் வீசிய இரண்டாவது புயலினால் மீண்டும் பாதிக்கப்பட்டு, மீட்பு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இது தவிர மற்றுமொரு சூறாவளி பங்களாதேஷை மீண்டும் தாக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளதாக கடைசியாகக் கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கின்றது.

## தொற்று நோயால் 200பேர் பலி

பங்களாதேஷில் தொற்று நோயினால் 200 பேர் பலியாகியுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

சூறாவளியினால் பாதிக்கப்பட்டு கடல்நீர் உட்புகுந்துள்ள பகுதிகளில் நீரினால் ஏற்படும் நோய்கள் பரவி வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## சுருட்டுத்தொழிலாளர் வேதனம் இருநூறு ரூபாவாக அதிகரிப்பு!

வடபிராந்தியத்திற்குப் பட்ட சகல சுருட்டுத் தொழில் நிலைய உரிமையாளர்களும் இம்மாத இறுதிக்குள் 1000 ரூபா கட்டி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட பின்னரே தொழிலை ஆரம்பிக்கவேண்டுமென வட,பிராந்திய சுருட்டுத்தொழிலாளர் சங்கத் தலைவர் செல்லையா உருத்திரா அறிவித்துள்ளார்.

அனுமதிப்பத்திரம் பெறாத உரிமையாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

தற்போது 1000 சுருட்டு உற்பத்திக்கு 200 ரூபா கூலி வழங்கப்படவேண்டும். இதை மீறி குறைந்த ஊதியத்தை வாங்கும் தொழிலாளிக்கு 100 ரூபாவும் வழங்க மறுக்கும் உரிமையாளருக்கு 250 ரூபாவும் தண்டம் அறவிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-11,74)

## குழந்தைகளுக்கு திரிபோஷாவுக்குப்பதிலாக ஜீவாகாரம் வழங்க வைத்தியர்கள் சிபார்சு

போஷாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு திரிபோஷாவுக்குப் பதிலாக ஜீவாகாரத்தை வழங்கலாமென யாழ் வைத்தியர்கள் சங்கம் சிபார்சு செய்துள்ளது.

இதனையடுத்து யாழ் மாவட்டத்திலுள்ள போஷாக்குக்குறைந்த பிள்ளைகளுக்கு யாழ் சுகாதாரத் திணைக்களம் ஜீவாகாரம் வழங்கவுள்ளது.

திரிபோஷாவில் உள்ள போஷாக்கு உள்ளூரில் தயாரிக்கப்படும் ஜீவாகாரத்தில் சரிசமனாக உள்ளதாகவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து, பொருளாதாரத்தடை காரணமாக தற்பொழுது யாழ் மாவட்டத்தில் திரிபோஷா விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உலர் உணவு விநியோகத்தில் மன்னார் மாவட்டம் முன்னணியில்

மன்னார் நகர உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஏப்ரல் மாதம் பதினைந்தாம் திகதி வரை 28 வது சுற்று உலர் உணவு விநியோகம் வழங்கப்பட்டு விட்டதாக மன்னார் நகர உதவி அரச அதிபர் ரி. இராமலிங்கம் தெரிவித்தார்.

அடுத்து 29 தொடக்கம் 32 வது சுற்று வரையிலான நான்கு வாரங்களுக்குரிய உலர் உணவு விநியோகத்தை இம்மாதம் 15 ஆம் திகதிக்கிடையில் வழங்கு வதற்குரிய வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.(33)

## ‘மேடையெங்கும் தமிழ் நாடகங்கள்’ வருட இறுதிக்குள் மகாநாடு கூட்டப்படும்

தமிழ் நாடகத் துறையினருக்கான மகாநாடு ஒன்று இவ்வருட இறுதிக்குள் கொழும்பில் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது நொந்து போயுள்ள தமிழ் நாடகத் துறைக்குப் புத்துயிர் ஊட்டி மீண்டும் மேடையெங்கும் நாடகங்களைத் தோன்றச் செய்வதே இந்த மகாநாடு கூட்டப்படுவதன் முக்கிய நோக்கமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

## கால்நடைகளுக்கும் உணவில்லை! கூட்டமாகப் பண்ணைக்குப் படையெடுப்பு

இராணுவ நடவடிக்கைகளை அடுத்துத் தீவுப் பகுதியிலிருந்து பெருமளவு மக்கள் வெளியேறியுள்ளதால் அங்கு கால்நடைகள் உணவின்றி பெருமளவில் இறந்து விடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உணவு இன்மையால் பல நாய்கள் தீவுப் பகுதியிலிருந்து பண்ணையை நோக்கிக் கூட்டம், கூட்டமாக வந்துகொண்டிருப்பதைத் தினமும் காணக் கூடியதாக உள்ளது.

மண்கும்பான், அல்லைப்பிட்டி, பண்ணைப் பாலப் பகுதிகளில் பெருமளவு கால்நடைகள் இறந்து கிடப்பதையும் காணக் கூடியதாக உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. 78

## அடைக்கலநாயகி அகதி முகாமில் தங்கியிருந்தோர் இடமாற்றம்

யாழ் அடைக்கலநாயகி அகதி முகாம் கடந்த சனிக்கிழமையுடன் மூடப்பட்டுள்ளது.

தற்சமயம் அங்கு அல்லைப்பிட்டி புங்குடுதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த 11குடும்பங்களே தற்காலிகமாகத் தனிப்பட்ட முறையில் தங்கியுள்ளனர்.

ஆரம்பத்தில் இந்த முகாமில் 10 10 குடும்பங்களைச் சேர்ந்த 7000 பேர் தங்கியிருந்தனர். இங்கு தண்ணீர் மலசலகூட வசதிகள் போதியளவில் இல்லாததினால் ஒட்டுமடம், குருநகர், கொழும்புத்துறை ஆகிய இடங்களுக்கு இங்கிருந்தோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (16)

## தொலைக்கல்விப் பயிற்சி நெறி விண்ணப்பத்திகதி மேலும் நீடிப்பு

தொலைக்கல்வி மூலம் முறைப்பயிற்சி பெறவிரும்பும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பத்திகதி முடிவடைந்த போதிலும் இங்கு வர்த்தமானிப் பத்திரிகை காலதாமதமாக வந்ததால் இதன் முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

தொலைக்கல்வி மூலம் பயிற்சிபெறும் பாடநெறிகள்: ஆரம்ப பாடநெறி (ஆண்டு 1 முதல் 8வரை), கணித பாடநெறி (ஆண்டு 6 முதல் 11 வரை), விஞ்ஞான பாடநெறி (ஆண்டு 6 முதல் 11 வரை)

விண்ணப்பிக்க விரும்பும் நிரந்தர ஆசிரியர்கள் கடந்த ஆண்டு விண்ணப்பித்தது போன்ற மாதிரிப் படிவத்திலேயே பூரணப் படுத்தி அதைக் கொழும்பில் உள்ள தொலைக்கல்விப் பிரிவிற்கோ அல்லது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அமைந்திருக்கும் யாழ் மாவட்டத் தொலைக் கல்விப் பிரிவின் பிரதி வெள்ளிக்கிழமை களிலோ, நேரிலோ, அல்லது தபால் மூலமோ அனுப்பலாம் என யாழ் மாவட்டத் தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம. செ. அலெக்ஸாந்தர் அறிவித்துள்ளார்.

50 வயதிற்கு மேற்பட்டவர்களும், பயிலுநர்கள் ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடியாது. ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுப் பதிவு இலக்கம் கிடைக்காதவர்களும் திரும்ப விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ய-5)

## வாலிபர் சங்க மணிவிழா

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க மணிவிழா ஏற்பாடுகள் யாவும் தயாராகி விட்டதாகச் சங்கத்தலைவர் ந.சப்ரட்ணசிங்கி முரசொலிக்குத் தெரிவித்தார்.

இச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட முதலுதவிப் பயிற்சி வகுப்பில் 40பேர் சித்தியடைந்துள்ளனர் இவர்களுக்கான சான்றிதழும் விரைவில் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ய.11)

## விளையாட்டு விழா

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஏ. அண்ணாத்துரை தலைமையில் ஸ்ரீ விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 49 புள்ளிகளைப் பெற்ற அத்திரு அம்மன் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், முறையே 43,42 புள்ளிகளைப் பெற்ற கலைமகள் விளையாட்டுக் கழகம், கல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் ஆகியன 2 ஆம்,3 ஆம் இடங்களையும் பெற்றன.

இவ்விளையாட்டு விழாவிற்குப் பிரதம விருந்தினராக உதவி அரசாங்க அதிபர் இ. ஐயாத்துரை கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். விளையாட்டுத்துறை அதிகாரி வீ. வைரமுத்து இதனை ஒழுங்குபடுத்தி நடத்தினார். (16)

## இந்தியத் தேர்தல் உத்தி- 2

### ஜனதா தள்

வி. பி. சிங் 466 நாட்கள் ஆட்சி செலுத்தினார். இந்திய மக்கள் அவர் மீது பெரும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வைத்திருந்தனர். ஆரம்பத்தில் மிக நிதானமாகச் செயற்பட்டுப் பாராட்டைப் பெற்றார். ஆனால், பல்வேறு அரசியல் சக்திகள் இக்கட்டான சூழ்நிலைகளை உருவாக்கின. எதிர்பாராமல் வந்தபதவி எதிர்பாராமல் போய் விட்டது.

அவருடைய கொள்கைகள், பெரும்பாலான வாக்காளர்களை குறிப்பாகப் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பினரைக் கவர்ந்துள்ளன மண்டல் திட்டத்தினுள் பெண்களைச் சேர்த்ததன் மூலம் பெண்களின் ஆதரவைப் பெறுகிறார். இட ஒதுக்கீட்டுத் திட்டமும் அவருக்குப் பலனைக் கொடுக்கும். இந்த இட ஒதுக்கீடு தென்நாட்டில் 140 இடங்களை நிர்ணயப்படுத்தக் கூடியது. எனவே இத்திட்டம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.

வி. பி சிங் எவ்வளவு சிறந்த திட்டங்களை அறிவித்தாலும், அதனால் ஏற்படும் பலன்களைப் பெற்று அனுபவிக்கக் கூடிய வகையில் சிறந்த கட்சி அமைப்பு இல்லை. இது பெரிய குறை. கட்சி அமைப்பும், கட்டுக்கோப்பும் இல்லாமல் மக்களின் ஆதரவை வாக்குகளாக மாற்றமுடியாது. உதாரணமாக மகாராஷ்டிரத்தில் இட ஒதுக்கீட்டுக்குப் பரவலான ஆதரவுஉள்ளது ஆனால்இந்தஆதரவைப்பயன் படுத்த அங்கு ஒரு அமைப்பு இல்லை.

மொத்த வாக்காளர்களில் 60 வீத மக்களை வி.பி. சிங்கின் திட்டம் கவரும், மிகுதி 40 வீதத்தில் படித்தவர்கள், அரச அதிகாரிகள், காவல் துறையினர் ஆகியோர் அடங்குவர் இவர்களை விரோதித்துக் கொண்டு தேர்தலில் வெற்றி பெறுவது மிகவும் கஷ்டம்.

பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில் பல புதிய சூழ்நிலைகளும் உத்திகளும் உருவாகியுள்ளன இந்தச் சூழ்நிலையில் வி. பி, சிங் எதிர்நீச்சல் போடவேண்டிய கட்டத்திலிருக்கிறார். இதில் வெற்றிபெறுவாரா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தொகுப்பு வி. வி.

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

27-4 91 இல் மண்டைதீவிலிருந்து அந்திரோசய் வரும்போது நீலநிற பயணப்பையுடன் தே.அ அட்டை NoV63833302 உலர் உணவு அட்டை, உற்பத்தித்திறன் நன்கொடை அட்டை,உணவு முத்திரைகள், உறுதிகள், உடுப்புகள் மற்றும் சில பொருள்கள் பண்ணைத் துறைப் பாலத்தைக் கடக்கும் சமயத்தில் மைமாறிப் போயிற்று இதை எடுத்தவர்கள் அதனுள் இருக்கும் முக்கியமான பொருள்களை எமக்கு முக்கியமானது என்பதை உணர்ந்து அவற்றை வீணாக்காமல் க. செ. கணபதிப்பிள்ளை சன்ஸ், மருந்துக்கடை, No51 KKS வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 05032

ஈழத்து இராமேஸ்வரம்

### புங்குடுதீவு பாணாவிடை சிவன்கோவில் மகோற்சவம் (1991) பின்போடல் பற்றிய

## அறிவித்தல்

தீவுப்பகுதியின் தற்போதைய பதற்றநிலைகாரணமாயும், புங்குடுதீவுமக்கள் இடம்பெயர்ந்துள்ளமையாலும் 29 - 04 - 91 தொடக்கம் 09-05-91 வரைநடைபெறவிருந்த 1991ஆம் ஆண்டிற்கான மகோற்சவம், 28 - 04 - 1991ஆம் திகதி நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்ட முடிவிற்கமைய பின்போடப்பட்டுள்ளது என்பதைப் பொதுமக்களுக்கு அன்புடன்அறியத்தருகிறோம். 08 - 05 - 91-ல் இடம்பெறவிருந்த திருநாவுக்கரசு நாயனார் குருபூசை வழமை போல்நடைபெறும்.

1991ஆம் ஆண்டிற்கான நிர்வாகசபைப் பொதுக் கூட்டம் ஜூன் 91-ல் இடம்பெறும்.

நன்றி

ஷெ ஆலய பரிபாலன தர்மகர்த்தாசபை
புங்குடுதீவு - 7

05081

## ஆற்றில்வீழ்ந்த குழந்தையைக் காக்க முயன்றபோது

# படகு மூழ்கி 60 பேர் பலி!

இந்தியாவில் ஆந்திரா மாநிலத்தில் படகு ஒன்று கோதாவரி ஆற்றில் மூழ்கியதில் அறுபதுக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர், 20பேர் காணாமல் போயுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இறந்தோரில் 31 பேர் பெண்களாவர்.

கோவில் திருவிழாவொன்றுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற படகே ஆற்றில் மூழ்கியது.

படகில் இருந்து ஆற்றில் தவறி வீழ்ந்த குழந்தையொன்றைக் காப்பதற்காகப் படகோட்டி படகைத் திடீரெனத் திருப்பிய போதே அது மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

40 பேர் மட்டுமே செல்லக்கூடிய இப்படகில் விபத்து நிகழ்ந்தபோது 100க்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தோரில் பலரின்சடலங்கள் இன்னும் மீட்கப்படவில்லை- இதனால் இறந்தோரின் தொகை மேலும் அதிகரிக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்த நூற்றாண்டில் அதிகளவு வெப்பம் தற்பொழுது உணரப்படுவதாக அறிவிப்பு

இந்த நூற்றாண்டிலேயே அதிகளவான வெப்பம் தற்பொழுது காணப்படுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சென்னை நுங்கம்பாக்கம் வானிலை நிலையத்தில் 41. 62 சதமபாகை வெப்பம் பதிவாகியிருந்தது. கடந்த 35 வருட காலத்தில் இந்த நிலையத்தில் பதிவான வெப்பத்தில் இதுவே அதிகளவானதாகும்.

மீனம்பாக்கத்தில் அன்றையதினம் 42 72 சதமபாகை வெப்பம் பதிவாகியுள்ளது. இந்த நூற்றாண்டில் இந்த நிலையத்தில் பதிவான வெப்பநிலைகளில் இதுவே உயரவளவாகும் எனச் சென்னை வானிலை நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த வாரம் அதிக வெப்பத்தினால் சென்னையில் ஒருவர் உயிரிழந்ததை முரசொலி வாசகர்கள் அறிந்ததே.

## சேறும் சகதியுமாக கொம்படிப்பாதை படகுப் பயணமும் நிறுத்தம்!

யாழ்ப்பாண மாவட்டத்துடன் மற்றைய மாவட்டங்களை இணைக்கும் பிரதான கடல்வழிப்பாதையான கொம்படிவெட்டைப் பாதையில் முற்றாக நீர் வற்றி சேறாக இருக்கின்றது.

இதன் காரணமாக மக்கள் படகுகளிலோ சைக்கிள் மற்றும் வாகனங்களிலுமோ பிரயாணம் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

கட்டைக்காடு, கண்டிக்குளம் தரைவழிப்பாதை வழியாக சைக்கிள் வியாபாரிகள் பொதுமக்கள் பிரயாணம் செய்கின்றனர்.

உணவுப் பொருட்களை ஏற்றிவரும் உழவு இயந்திரங்களும் இப்பாதை வழியாகவே பிரயாணத்தைத் தொடர்கின்றன. (18)

## அகதி முகாமில் கண்ணோய்! இடம்பெயர்ந்த 75 பேர் பாதிப்பு

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து ஊருநகர் செல்வேல் மகாவித்தியாலயம், கொழும்புத்துறை சென் யோசப் வித்தியாலயம் ஆகிய முகாம்களில் தங்கியுள்ளவர்களில் கணிசமானோருக்குக் கண்ணோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முகாம்களில் 75பேருக்கும் மேற்பட்டோர் கண்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் 11

இவ்வருடத்திற்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட்மாதம் பதினோராம் திகதி நடாத்தப்படவுள்ளது.

1991 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## வடக்கில் சுமுகநிலை தோன்றினால் மட்டுமே மீண்டும் மின்சாரம் வழங்கப்படுமாம்!

வடபகுதிக்கு உடனடியாக மின் விநியோகம் தற்போதைக்கு மீண்டும் வழங்கப் படமாட்டாதென கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை யொன்று பாதுகாப்புத் துறையினரை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

மீண்டும் வடபகுதியில் சுமுக நிலை தோன்றினால் மட்டுமே மின்விநியோகத்தை வழங்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ய-11)

## சணல் உற்பத்தி அதிகரிப்பு

வலிமேற்குப் பிரிவிலுள்ள வட்டுக்கோட்டைப் பகுதியில் இவ் வருடம் சணல் உற்பத்தி அதிகரித்துள்ளது. கால்நடைகளின் உணவுக்காகவே இச்சணலை விவசாயிகள் கூடுதலாகப் பாவித்து வருகின்றனர். (ய-1)

## யாழ் கல்லூரி நாளை ஆரம்பம்

வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி இரண்டாம் தவணைக்காக நாளை புதன்கிழமை ஆரம்பமாகும் என்றும்; ஆசிரியர் கூட்டம் அன்று காலை ஒன்பது மணிக்கு நடைபெறும் என்றும்; கல்லூரி முதல்வர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தெரிவிக்கிறார்.

## யாழ் சென்றலில் வேலணை அலுவலகம்

வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகம் தற்காலிகமாக யாழ் மத்திய கல்லூரியில் இயங்குவதற்கு யாழ் கல்விப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார். (73)

## தீவுப் பகுதி திறம் புகையிலை தென்பகுதிக்குக் கப்பலில் போகிறது

தீவுப் பகுதியில் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட புகையிலைகள் தற்பொழுது கப்பல் மூலம் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றன.

சரவணை, புளியங்கூடல், நாரந்தனை பகுதிகளிலிருந்து தெரிந்து பெறப்பட்ட சிறந்த புகையிலைகளே கப்பலில் கொழும்புக்கு தற்பொழுது அனுப்பப்பட்டு வருகின்றன.

தற்பொழுது ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரே இந்த வேலையைச் செய்து வருகின்றனராம்.

இப்பகுதி வீடுகளிலிருந்து தெரிந்தெடுத்த புகையிலைகளை அங்கு உள்ள பாசறைகளில் சுற்றி கொழும்புக்கு அனுப்பும் இராணுவம் வீடுகளிலிருந்து எடுத்த தரம் குறைந்த புகையிலையை தீயிட்டுக் கொழுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையினால் இப்பகுதி விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தென்பகுதியில் இந்த ரக புகையிலைக்கு தற்பொழுது பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்பத்திரியில் நீண்ட கியூ

யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் நேற்றுப் பெரும்எண்ணிக்கையில் நோயாளிகள் காணப்பட்டனர்.

நோயாளிகளின் 'கியூ' வெளிநோயாளர் பிரிவிலிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக பூபாலசிங்கம் புத்தகசாலை வரை நீண்டிருந்தது.

குடாநாட்டிலுள்ள பல அகதிமுகாம்களில் இருந்தே கூடுதலான நோயாளிகள் வந்திருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (70)

## பதில்உதவி சுங்க அத்தியட்சகராக மேலும் 13 தமிழர் நியமனம்

பதில் உதவி சுங்க அத்தியட்சகர்களாக மேலும் பதின்மூன்று தமிழர்களை நியமிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வழங்கப்பட்ட இந்தப் பதில் உதவி சுங்க அத்தியட்சகர்கள் நியமனத்தில் இன விகிதாசாரத்திற்கேற்ப தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்படாமை பற்றி ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்தே இந்தப் பணிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ரயில் பயணிகள் மடுவழியாக யாழ் வர இராணுவம் அனுமதி

கொழும்பிலிருந்து யாழ் வரும் பயணிகள் மன்னார் வீதிவழியாகப் பயணத்தை தொடரலாமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வீதியால் பயணம் செய்ய வவுனியாவில் அனுமதிக்கப்படவில்லை என அறிவிக்கப்படுகின்றது.

எனினும் கொழும்பிலிருந்து வவுனியாவை வந்தடைந்த ரயில் பயணிகள வவுனியா, மதவாச்சி வீதிவழியாக இ.போ.ச. டிப்போ வரை சென்று அங்கிருந்து சின்னப் புதுக்குளம், கூழாங்குளம், நெலுக்குளம் வழியாக மடுவுக்குச் சென்று அங்கிருந்து யாழ் வர அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை அவசர அலுவல்களின் பொருட்டு யாழ் வந்த சுமார் 500 பயணிகள் இந்தப் பாதை வழியாகவே இங்கு வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாதையிலும் பல இடங்களில் இராணுவ சோதனையின் பின்னரே பயணிகள் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. வடபகுதி செல்வோர் இந்தப் பாதையைப் பயன்படுத்தலாமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

## அவசர மருந்துகளும் தட்டுப்பாடு! பல சத்திர சிகிச்சைகள் நிறுத்தம்!!

யாழ் போதனாவைத்தியசாலையில் பல சத்திர சிகிச்சைகள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பலர் குடல்வளரி சத்திர சிகிச்சைக்கு வைத்தியசாலையில் பதிவு செய்திருந்த போதிலும் இவர்களுக்கான சத்திர சிகிச்சைத்திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லையாம்.

இது பற்றி வைத்தியசாலை அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டபோது; சத்திரசிகிச்சைக்கான மருந்து வகை அனுப்பப்படாததாலேயே இந்நிலை தோன்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனால் பல நோயாளிகள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்கு வசதியின்றி கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது போன்றே மேலும் பல சத்திரசிகிச்சைகள் மருந்தின்மையால் ஒத்திப் போடப்பட்டுள்ளதாகவும், இதனால் நோயாளர்கள் கடும் உடல் உபாதையை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (70)

## குப்பைமேனியும் வெற்றிலையும் தேள்கடிக்கு நல்ல நிவாரணிகள்

தேள் கடித்தால் வலியில் இருந்து உடனடியாக நிவாரணம் பெற எளிதான வைத்தியம் இதோ.

'குப்பைமேனி இலையில் பத்தும், வெற்றிலையில் மூன்றும் சிறிதளவு உப்பும் எடுத்துங்கொள்ளுங்கள், கிண்ணம் ஒன்றில் ஒரு மேசைக்கரண்டி அளவு நல்லெண்ணை எடுத்துக்கொள்ளவும்.

குப்பைமேனியையும், வெற்றிலையையும் உப்பையும் சேர்த்துக் கசக்கிச் சாறு பிழியவும். கிண்ணத்தில் உள்ள நல்லெண்ணையை கொதிக்கவைத்து, பிழிந்த சாற்றை அதில் ஊற்றினால் ஆவிவரும். தேள் கடித்த இடத்தை அந்த ஆவியில் காட்டினால் சில வினாடிகளில் வலி பறந்தோடிவிடும்.

## பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்க பாகிஸ்தான் அரசு மறுப்பு!

பாகிஸ்தான் அரசு தனது பாதுகாப்புச் செலவினத்தை குறைக்க முடியாது என அறிவித்துள்ளது.

பிறநாடுகளின் நெருக்குதல்களுக்கு பாகிஸ்தான் பணியமாட்டாது எனவும், பிறநாடுகளின் அழுத்தலுக்காக பாகிஸ்தான் தனது பாதுகாப்பு நிலையை விட்டுக் கொடுக்க முடியாது எனவும் பாகிஸ்தான் அறிவித்திருக்கிறது.

# யாழ் நகரப்பகுதியின் கீழாக பழமையான வடிகால் கண்டுபிடிப்பு

யாழ் நகரப்பகுதியின் கீழ் பழமையான சுமார் அரை மைல் நீளமான வடிகால் வாய்க்கால் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ் வண்ணார்குளத்திலிருந்து புல்லுக்குளம் வரையில் இவ்வடிகால் யாழ் நகரின் கீழாக செல்கிறது.

இருபது வருடத்துக்கும் மேலாக கவனிப்பாரற்றுக் கிடந்த இப்பாரிய சுற்றுவட்டம் கொண்ட இவ் வடிகால் தற்போது யாழ் மாநகரப் பகுதியினரால் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றது.

வண்ணார்குளத்திலிருந்து ஆரம்பிக்கும் இப்பாரிய வடிகால் நவீனசந்தை, சங்கரப்பிள்ளை கட்டிடம், ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி ஆகியவற்றிற்குக் கீழாக நீண்டு செல்கிறது.

மாநகரப் பகுதியினரின் தகவலின் படி இவ்வடிகால் யாழ் நகரின் கீழ் உள்ள பிரமாண்டமான பதுங்குகுழியாக பாவிக்கலாம் என அறியப்படுகிறது. 70

## தீவுப்பகுதி மாணவர்களுக்கு தற்காலிக வகுப்புகள் ஏற்பாடு

அண்மைய அசம்பாவிதங்களால் தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு மாற்று ஒழுங்குகள் தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வேலணைக் கோட்டத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் மாலை நேரப் பாடசாலைகளாக பின்வரும் இடங்களில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகள் யாழ் மத்திய கல்லூரி, வேலணைக் கொத்தணி யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயம், புங்குடுதீவு கொத்தணி யாழ் சன்மார்க்க வித்தியாசாலை, மண்டைதீவு கொத்தணி யாழ் பெரியபுலம் மகாவித்தியாலயம், காரைநகர் கொத்தணி வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி தலைமையில் யாழ் மத்திய கல்லூரியில் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும் கொத்தணி அதிபர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் இதில் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து வேறு கோட்டங்களுக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் தற்போது வதியும் இடத்திற்கு அண்மையிலுள்ள கோட்டக் கல்வி அதிகாரி மூலம் பாடசாலைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 70

## அகதிகளின் நலன்கருதி குழாய்க் கிணறுகள் அமையும்

தற்போது அகதிகள் உள்ள பாடசாலைகளில் கிணற்று நீர் வசதி இல்லாவிடில் உடனடியாக குழாய்க் கிணறு வசதி செய்து கொடுக்கப்படுமென மாநகர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பதினான்கு பாடசாலைகளில் பதின்மூவாயிரம் அகதிகள் இருக்கிறார்கள் இவ் அகதிகளுக்கு மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை அகதிகள் ஒழுங்கற்ற முறையிலேயே பாவிக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நோய் பரவவும் சாத்தியக்கூறுகள் அதிகமாயுள்ளதாகவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்

## பொலிஸார் - பஸ் ஊழியர்கள் வேலூரில் மோதல்

தமிழ் நாடு வேலூர்ப் பகுதியில் பஸ் போக்குவரத்து ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் ஒருவர் பலியானார். 75 பேர் காயமடைந்தனர்.

பஸ்வண்டியொன்று போக்குவரத்துவிதியை மீறிய சம்பவத்தின் எதிரொலியாகவே இம்மோதல் ஏற்பட்டது. துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானார் பலர் காயமடைந்தனர் போக்குவரத்துகள் அப்பகுதியில் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

---

**க. பொ. த...**

வும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பிற பாடசாலைகளில் கல்வி கற்றுதாம் விரும்பும் பாடசாலைகளில் க.பொ.த உயர்தரவகுப்பில் கல்வியை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பி 23ஆம் திகதிக்கு முன்பாக நடைபெறவுள்ள தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றி அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் அனுமதிகள் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ள க. பொ. த சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படும் எனவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். 70

**கரும்புலிகளால்...**

புலிகளின் இத்தற்கொலைத் தாக்குதலினால் கப்பலில் பாரிய துவாரம் ஏற்பட்டதாகவும் பி. பி. ஸி மேலும் தெரிவித்தது.

**கோழியகுளத்தில்...**

பலியானது தெரிந்ததே. இவர்களில் இரு இராணுவ அதிகாரிகளும் அடங்குவர் என ஏ. ஜென்சி செய்திகள் தெரிவித்தன இத்தாக்குதலில் மேலும் 15 படையினர் காயமடைந்துள்ளனர்.


**இரண்டாந் தவணை ஆரம்பம்**

செண் ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்

இரண்டாந் தவணை ஆரம்பம்
10 - 5 - 91 வெள்ளிக்கிழமை

05034 அதிபர்கள்


## எழுதுவினைஞர் பரீட்சை முடிவுகள் வந்துள்ளன

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிசிறப்பு எழுதுவினைஞர் சேவைக்கான பரீட்சையின் பெறுபேறுகள் வந்து சேர்ந்துள்ளன

யாழ்செயலகத்தைச்சேர்ந்த எழுதுவினைஞர்களும் இப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

இப்பதவியுயர்வைப் பெற்றுக்கொள்வதில் உள்ள விருப்பம், விருப்பமின்மையைத் தெரிவிக்கும் படியும், கடமையேற்க விருப்பமாயின் எந்த மாகாணசபையின் கீழ்கடமை புரிய விரும்புகிறீர்கள் என்பதனையும் குறிப்பிட்டு இவ்வார இறுதிக்குள் அறிவிக்கும்படியும் இப்பரீட்சையிற் சித்தியடைந்தோர் கேட்கப்பட்டுள்ளனர். 47

## இலங்கை வங்கியில் கொடுப்பனவு

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களுக்கு நேற்று முதல் தலா ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் புதன்கிழமை (நாளை) வரை இக்கொடுப்பனவு தொடர்ந்து வழங்கப்படும்.

கடந்த வாரம் இவ்வங்கிக் கிளையில் வாடிக்கையாளருக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

**பதுங்கியிருந்து...**

பொது மக்கள் மீது பதுங்கித் தாக்குதல் நடாத்தினர்.

கடந்த சனியன்று காலை 7 மணிக்கு நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் 2 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

இதே தினத்தன்று வாகரை விலுச் சந்தியில் வைத்து குழந்தைவேலு - 19 என்பவரைக் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். 71

**சடலங்களை...**

செஞ்சிலுவைச் சங்கத்தினர் தயக்கம் காட்டுகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் மன்னார் - வவுனியா வீதியில் தொண்டர் ஸ்தாபன நிறுவனங்களின் வாகனங்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானதை சுட்டிக்காட்டியே செஞ்சிலுவைச் சங்கம் இத்தயக்கத்தை காட்டுகிறதாக தெரிவிக்கப்படுகிறது. 71

**வெளிமாவட்ட...**

செல்லுமட்டும் இவர்கள் தமது கையெழுத்தை தொடர்ந்து இடுமாறும் அறிவிக்கப்படுகிறது.

வவுனியா ஊரடங்குச் சட்டம் அமுலானதையடுத்து வெளிமாவட்டங்களுக்கு இவர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது 70

## காரைநகர் அகதிகளுக்கு இலவசமாக லக்ஸ்பிறே

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து வட்டுக்கோட்டை, பொன்னாலை, மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி, பண்ணாகம், சங்கானை பகுதிகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு, பண்ணாகம் வழக்கம்பரையில் வைத்து லக்ஸ்பிறே பால்மா இலவசமாக காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்பட்டுவருகின்றன. 12

## தேர்தல் கண்காணிப்பு குழு பணியை ஆரம்பித்தது

தென்னிலங்கை உள்ளூராட்சித் தேர்தலை கண்காணிக்க அழைக்கப்பட்ட குழு நேற்று தனது பணியை ஆரம்பித்துள்ளது.

பதினைந்து உறுப்பினர் கொண்ட இக்குழுவில் இந்தியா பாகிஸ்தான், கனடா, நேபாளம், அவுஸ்ரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோர் அடங்குகின்றனர்.

இதேவேளை தேர்தல் பிரசாரங்கள் நாளை நள்ளிரவுடன் முடிவடைகின்றன.

## யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வெளியிடங்களுக்கு விண்ணப்பம்

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் கொழும்பு பேராதனை பல்கலைக்கழகங்களுக்கும், ஏனைய வெளிநாட்டுப்பட்டதாரிக் கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களில் ஒரு சிலருக்கே கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விண்ணப்பதாரிகள் முதலாம் வருடமாணவர்களாகவும், கொழும்பில் தங்கும் வசதியுடையவர்களாகவும் இருக்கவேண்டும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முன்னுரிமை வழங்கியுள்ளது.

ஏனைய மாணவர்கள் மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்திற்கே வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. ப-11

## சாட்டி மாதா ஆலய அகதிகளுக்கு எதுவித உதவியும் கிடைப்பதில்லை

தீவுப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற பொழுதிலும் வேலணை சாட்டி மாதா ஆலயத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து இங்கு தங்கியுள்ளனர்.

பெரும்பாலும் இங்கு தங்கியுள்ளவர்கள் வயோதிபர்களே இவர்களுக்கு உணவு மற்றும் வைத்திய வசதிகளை எவரும் செய்ய முன்வரவில்லையென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்மிடமிருக்கும் பொருள்களை வைத்துக்கொண்டு சாப்பிடுவதாகவும் அவை ஒரு சில தினங்களுக்கே போதுமானவை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 19

## குவாறியில் துப்பாக்கித்தாக்கு

மாவிட்டபுரம் குவாறிப் பகுதியில் வேலையிலீடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். 71

**ஏப்ரல்...**

தாக தெரிவிக்கப்படுகிறது.

புகையிரதத் திணைக்களத்தைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் பென்சன் வவுச்சர்கள் இவ்வார இறுதிக்குள் அனுப்பிவைக்கப்படும் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 47

## வீரமரணம்

வவுனியாவில் கோழியகுளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அதிரடித்தாக்குதலில் மேலும் இரு போராளிகள் ஜேராம், ஜஜன் வீரமரணமடைந்தனர். 71

## வெப்பம் அதிகரிப்பு

கொழும்பில் இரவு வேளைகளில் வெப்பநிலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நான்கு பாகையளவுக்கு வெப்பநிலை உயர்வடைகிறது

**வவுனியாவில்...**

இழவிக்குளம், கோழிய குளம் ஆகிய பகுதிகளில் தாக்குதல் நடத்தின சேதவிவரங்கள் தெரியவரவில்லை. 71


**காலமானார்**

**செல்லையா இளையதம்பி**

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லையா இளையதம்பி 5 5. 91ல் காலமானார். இவர் மனோன்மணியின் அன்புக்கணவரும் தேவகுமார் (நோர்வே), காலம் சென்ற கெங்கை வேந்தனின் அன்புத்தந்தையுமாவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
செ. வைரவநாதன் (செல்வன்) (மருமகன்)

05035


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிகேஷன்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மி'பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 07-05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.